**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
*******

2023–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 – ம் நாள் வெள்ளிக்கிழமை
******

**இடைமனு எண்.5/2023–ல் அசல் வழக்கு எண். 44/2020**

1. இளங்கோவன்
2. மதியழகன் .....மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்...

...எதிராக...

பார்த்தசாரதி ....எதிர்மனுதாரர்/வாதி...

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 04.09.2023 அன்று இறுதியாகவிசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு R.கார்த்திக்ராஜன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக 16.09.2021–ம் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 2–ம் மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச கட்டளை–9, விதி–7–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவின் மனுதாரர், அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி ஆவார். 1–ம் பிரதிவாதி மனுதாரரின் சகோதரர். மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது எதிர்மனுதாரர்/வாதியால் சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயல்

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜராகி கட்சி செய்து வழக்கை நடத்தி வந்தார்கள். மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய 16.09.2021 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றை தேதியின் முன்பில் இருந்தே 2–ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாம் வைத்தியம் பார்த்து வந்ததினால் அவரது வழக்கறிஞரை சந்தித்து அறிவுரை கேட்டக முடியவில்லை. 2–ம் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் கடந்த 16.09.2021 அன்று ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததினால் 16.09.2021 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலைபட்ட உத்தரவு பிறப்பிக்கப்ட்டுள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. 16.09.2021 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததை மன்னித்து பிறப்பிக்கப்ட்டுள்ள ஒரு தலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து வழக்கை மேல் நடத்த வேண்டியது அவசியமாவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையெனில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 16.09.2021–ம் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 2–ம் மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மமனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர்களின் மனு சரியல்ல. சட்டப்படி நியாயப்படியும் நிலைநிற்க கூடியது அல்ல. மனுவுக்கு ஆதரவாக 2-ம் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது. மனுதாரர்கள் வழக்கில் எதர்வழக்குரையை மூன்று மாதத்தில் தாக்கல் செய்யாமல் 17.06.2022 அன்று ஒருதலைபட்ச உத்தரவாகி 10 மாதம் கழித்து 06.04.2023-ல் அதை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து உள்ளார்கள். மனுதாரர்கள் In person ஆக ஆஜர் ஆவதும், அதன்பிற்பாடு வழக்கறிஞர் மூலம்

ஆஜராவதும் அதன்பின்பு எக்ஸ்பார்டியில் விடுவதும் அதன் பிறகு வேறு புதிய வழக்கறிஞர் மூலம் ஆஜராகிய ஒரு வாடிக்கையாக கொண்டுள்ளார்கள். வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டி வழக்கை எக்ஸ்பார்டியில் விட்டு அதை ரத்து செய்ய மனு போட்டுள்ளார்கள். 2-ம் மனுதாரருக்கு உடலநிலை சரியில்லை என்ற கூற்று பொய்யானது. 2-ம் மனுதாரர் நல்ல திடகாத்திர நிலையில் இருந்து கொண்டே வேண்டுமென்றே எக்ஸ்பார்ட்டியில் விட்டுவிட்டார்கள். 2-ம் எதிர்வாதி வழக்கு சொத்தில் டீ கடை நடத்தி வருகிறார். மனுதாரர்கள் சகோதரர்கள் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லை என்றால் மற்றவர் ஆஜராகி வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கலாம். இம்மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே 2-ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3.மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் இம்மனுவின் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி ஆவார் என்றும், 1–ம் பிரதிவாதி மனுதாரரின் சகோதரர் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளின்மீது எதிர்மனுதாரர்கள்/வாதியால் சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜராகி கட்சி செய்து வழக்கை நடத்தி வந்தார்கள் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய 16.09.2021 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றை தேதியின்

முன்பிலிருந்தே 2−ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாம் வைத்தியம் பார்த்து வந்ததினால் அவரது வழக்கறிஞரை சந்தித்து அறிவுரை வழங்க முடியவில்லை என்றும், 2−ம் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் கடந்த 16.09.2021 அன்று ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததினால் 16.09.2021 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், 16.09.2021 அன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததை மன்னித்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஒரு தலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து வழக்கை மேல் நடத்த வேண்டியது அவசியமாவும, நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லையெனில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக 16.09.2021−ம் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி 2−ம் மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், மனுவுக்கு ஆதரவாக 2-ம் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், மனுதாரர்கள் வழக்கில் எதர்வழக்குரையை மூன்று மாதத்தில் தாக்கல் செய்யாமல் 17.06.2022 அன்று ஒருதலைபட்ச உத்தரவாகி 10 மாதம் கழித்து 06.04.2023-ல் அதை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து உள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் In person ஆக ஆஜர் ஆவதும், அதன்பிற்பாடு வழக்கறிஞர் மூலம் ஆஜராவதும் அதன்பின்பு எக்ஸ்பார்டியில் விடுவதும் அதன் பிறகு வேறு புதிய வழக்கறிஞர் மூலம் ஆஜராகிய ஒரு வாடிக்கையாக கொண்டுள்ளார்கள் என்றும், வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டி வழக்கை எக்ஸ்பார்டியில் விட்டு அதை ரத்து செய்ய மனு போட்டுள்ளார்கள் என்றும், மனுதாரருக்கு உடலநிலை சரியில்லை

என்ற கூற்று பொய்யானது என்றும், 2-ம் மனுதாரர் நல்ல திடகாத்திர நிலையில் இருந்து கொண்டே வேண்டுமென்றே எக்ஸ்பார்ட்டியில் விட்டுவிட்டார்கள் என்றும், 2-ம் எதிர்வாதி வழக்கு சொத்தில் டீ கடை நடத்தி வருகிறார் என்றும், மனுதாரர்கள் சகோதரர்கள் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லை என்றால் மற்றவர் ஆஜராகி வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்கலாம் என்றும், இம்மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே 2-ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிக்களுக்கு எதிராக கடந்த 16.09.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யதுள்ள இம்மனுவில் 2–ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூறமுடியாமல் போய்விட்டது என்று கூறி எதிர்வழக்குரையுடன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் கூற்றை மறுத்துள்ள நிலையிலும், இம்மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை என்றும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் இந்த வழக்கில் இரு தரப்பையும் கேட்டு வழக்கை தகுதியின் அடிப்படையில் முடிவு செய்வதுதான் இயற்கை நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும், இம்மனு அனுமதிக்க தக்கது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால்

சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.5/2023–ல்
அசல் வழக்கு எண்.44/2020
நாள்.08.09.2023.